செய்தி வெளியீடு எண்.84 நாள்.08.10.2020

## பத்திரிக்கை செய்தி

## மண்டல இணை இயக்குநர் அலுவலகம், கிண்டி, சென்னை-32 அவர்களுக்கு தரக்கப்டுப்பாடு ஆணை செயலாக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மண்டல இணை இயக்குநர், கிண்டி, சென்னை-32 அவர்களுக்கு தரக்கட்டுபாடு ஆணைகள் 1981,1997 மற்றும் 2003 ஆகியவற்றை செயல்படுத்தும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி வீட்டு உபபோக மின்சாதனப் பொருட்கள் மற்றும் எரி எண்ணெய் அழுத்த அடுப்பு உற்பத்தி மற்றும் அவற்றை விற்பனை செய்யும் அனைத்து விதமான நிறுவனங்களை மண்டல இணை இயக்குநர் அவர்கள் எவ்வித முன்னறிவிப்பின்றி ஆய்வு செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிறுவனங்கள் இந்திய தரக்கட்டுப்பாடு முத்திரை பெற்ற மின்சாதன பொருட்களை மட்டுமே உற்பத்தி மற்றும் விற்பனை செய்ய வேண்டும் தவறும்பட்சத்தில் தரக்கட்டுப்பாடு ஆணை 1997 மற்றும் 2003ன் படி அவர்களின் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுத்து, தடை செய்யப்பட்ட அப்பொருட்களை பறிமுதல் செய்து நீதிமன்றம் மூலம் 2 இலட்சம் ரூபாய் வரை அபராதத் தொகையோ அல்லது 2 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையோ வழங்கப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.**

**வெளியீடு**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,**
**சென்னை-01**